தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk



| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2023.07.31 |

# இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் (கொ.மு.சு) – கட்டடவாக்கத் தொழிற்துறை

கட்டடவாக்கத் தொழிற்துறையின் அபிவிருத்திகளை உரிய காலத்தில் எடுத்துக்காட்டும் நோக்குடன் 2017 யூனில் கட்டடவாக்க நடவடிக்கைகளுக்காக கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீட்டை இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரங்கள் திணைக்களம் தொடங்கியது. இவ்வளவீட்டினைத் திணைக்களம் ஆறு ஆண்டுகளாக தொடர்ந்தும் முன்னெடுத்து, இலங்கை மத்திய வங்கிக்கு முக்கிய தொழிற்துறை விடயங்களை வழங்கி, கொள்கை வகுப்பு செயன்முறைக்கு உதவியளித்தது. தற்போது தயாரித்தல் மற்றும் பணிகள் என்பவற்றுக்கான வேறு இரண்டு கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் அளவீடுகளை வங்கி மாதாந்த அடிப்படையில் வங்கியின் வெப்தளத்தில் வெளியிடுகின்றது. ஆகையினால், 2023 யூன் அளவீட்டுச் சுற்றிலிருந்து தொடங்கி பொதுமக்களின் தகவல்களுக்காக கட்டடவாக்க கொள்வனவு முகாமையாளர்கள் சுட்டெண் அளவீட்டுப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

2023 யூனுக்கான கட்டடவாக்கக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீட்டுப் பெறுபேறுகள் மீதான அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது. அளவீட்டுப் பெறுபேறுகள் இதன் பின்னர் தொடர்ந்து வருகின்ற மாதத்தின் இறுதியில் ஊடக அறிக்கைகள் வாயிலாக மாதாந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு புள்ளிவிபர பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்திற்கு பதிவேற்றம் செய்யப்படும்.

## கட்டடவாக்கத் தொழிற்துறைக்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் - யூன் 2023

**கட்டடவாக்கத் தொழிற்துறை 2023 யூனில் சுருக்கமடைந்து காணப்பட்டு 44.4 கொண்ட மொத்த நடவடிக்கைச் சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.** கட்டடவாக்கச் செயற்றிட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவுக்கு கிடைக்கப்பெறுகின்றமைக்கு மத்தியில், அநேகமான கம்பனிகள் உகந்த மட்டத்திற்கு குறைவான மட்டத்திலேயே தொழிற்பட்டன. எனினும், பொருட்களின் விலைகளின் நிலையான வீழ்ச்சி சிறியளவிலான கட்டடவாக்கப் பணிகளை தொடங்குவதற்கு தூண்டியுள்ளது என பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

புதிய செயற்றிட்டங்கள் பற்றாக்குறை தொழிற்துறைக்கு தொடர்ந்தும் தடையாகக் காணப்பட்டது. இது புதிய கட்டளைகளில் தொடர்ச்சியான வீழ்ச்சி மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட சில செயற்றிட்டங்கள் தவிர, பாரிய செயற்றிட்டங்கள் கிடைக்கப்பெறவில்லை என்றும் கிடைக்கப்பெறுகின்ற விலைக்கோரல்களுக்கு குறிப்பீடுகளைச் சமர்ப்பித்தலும் உயர்வான போட்டிமிக்கதாகக் காணப்படுகின்றது என்றும் பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். எவ்வாறாயினும், இடைநிறுத்தப்பட்ட பாரியளவிலான கருத்திட்டங்கள் ஆண்டின் பிந்திய பகுதியில் படிப்படியாக மீளத்தொடங்குமென அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

மேலும், பிரதானமாக செயற்றிட்டங்கள் நிறைவுபெற்றதன் பின்னரான தொழில்முடிவுறுத்தல்கள் காரணமாக தொழில்நிலை யூனில் சுருக்கமடைந்து காணப்பட்டது. மேலும் முன்மொழியப்பட்ட செயற்றிட்டங்களின் வீழ்ச்சிக்கு இசைவாக கொள்வனவுகளின் அளவு குறைவடைந்தது. அதேவேளை குறைவான கட்டளை அளவுகளின் காரணமாக மாத காலப்பகுதியில் நிரம்பலர் விநியோக நேரம் குறுக்கமடைந்து காணப்பட்டது.


| மாறி | மே | யூன் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **மொத்த நடவடிக்கை** | **47.1** | **44.4** | - | **வீழ்ச்சியடைகின்றது உயர்வான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 42.9 | 38.9 | - | வீழ்ச்சியடைகின்றது உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 22.9 | 30.6 | + | வீழ்ச்சியடைகின்றது மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் அளவு | 45.7 | 41.7 | - | வீழ்ச்சியடைகின்றது உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 44.3 | 47.2 | + | குறுக்கமடைகின்றது மெதுவான வீதத்தில் |

மூலம்:இலங்கை மத்திய வங்கி

பொருளாதாரத்தில் படிப்படியான மீட்சியடைதல், இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தல் மற்றும் இடைநிறுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் மீள தொடங்குவதற்கான எதிர்பார்க்கை என்பனவற்றின் பிரதான காரணமாக தொழிற்துறையின் எதிர்கால எதிர்பார்க்கை சாதகமாகக் காணப்படுகிறது. எனினும், சந்தை கடன்பெறுதல் வீதங்களில் இறுக்கமான கீழ்நோக்கிய போக்கு பல தனியார் துறை கட்டடவாக்கத் துறை செயற்றிட்டங்கள் தொடங்குவதை தாமதப்படுத்துகின்றது.

மொத்த நடவடிக்கை சுட்டெண் அளவு
யூன் 2023
**44.4**

கட்டடவாக்க கொ.மு.சு மொத்த நடவடிக்கைச் சுட்டெண்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *தொகுத்தல் : கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்*[1]

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்கும்.
கொ.மு.சு=50 துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

### *மாறிகள் பற்றிய வரைவிலக்கணங்கள்:*

மொத்த நடவடிக்கை: கட்டடவாக்க நடவடிக்கையின் மொத்த அளவு, பன்னாட்டு நடத்தையினைப் பின்பற்றி 'கட்டடவாக்க கொ.மு.சு' ஆக குறிப்பீடு செய்யப்படும் முதன்மைச் சுட்டெண் இதுவாகும். இது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் தொழில்நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

தொழில்நிலை: நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை

கொள்வனவுகளின் அளவு: உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள்

நிரம்பலர் விநியோக நேரம்: கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு

ஏனைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.

### *அளவீட்டு பதிலிறுத்தல்கள்*

மாதத்திற்கு மாதம் அபிவிருத்திகளைக் எடுத்துக்காட்டுவதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுத்தல்களை உள்ளடக்கி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட உயர்தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்க கம்பனிகளை இலக்காகக் கொண்டு இவ்வளவீடு நடாத்தப்படுகின்றது

1. உலகளாவிய தொகுப்பாளராக இனங்காணப்பட்டு உலகளவில் 40 ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சுட்டெண்களை தொகுக்கின்ற எஸ்அன்ட் பி குளோபல் நிறுவனததால் பின்பற்றப்படும் முறையியல் பயன்படுத்தி கொ.மு.சு தொகுக்கப்படுகின்றது.

## மொத்த நடவடிக்கை சுட்டெண் தொடர் - கட்டடவாக்க கொ.மு.சு

| மொத்த நடவடிக்கைச் சுட்டெண் | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|---|
| சன | - | 55.8 | 47.7 | 41.5 | 66.7 | 54.1 | 36.5 |
| பெப் | - | 52.2 | 63.6 | 40.0 | 68.4 | 47.2 | 37.8 |
| மாச் | - | 44.0 | 50.0 | 14.0 | 72.9 | 30.3 | 45.8 |
| ஏப் | - | 45.7 | 26.9 | 10.0 | 31.7 | 7.5 | 26.4 |
| மே | - | 52.1 | 50.0 | 66.7 | 29.7 | 3.8 | 47.1 |
| யூன் | 60.0 | 56.3 | 52.0 | 71.4 | 52.7 | 6.9 | 44.4 |
| யூலை | 63.5 | 50.0 | 63.8 | 75.7 | 51.4 | 22.2 | - |
| ஓக | 60.0 | 50.0 | 53.2 | 73.2 | 32.9 | 32.9 | - |
| செத் | 50.0 | 50.0 | 43.1 | 72.1 | 51.4 | 44.6 | - |
| ஒத் | 53.8 | 45.8 | 56.7 | 35.7 | 71.6 | 32.9 | - |
| நவெ | 59.3 | 40.0 | 53.6 | 39.1 | 63.2 | 30.3 | - |
| திசெ | 50.0 | 35.7 | 40.4 | 70.3 | 61.4 | 32.9 | - |